## DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII, Cr.P.C.)

# IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC – 163/2024 |
| Deposition of Witness | : | PW– 8 |
| Name | : | தியாகராஜன் |
| Father Name | : | சுப்பரமணியன் |
| Village | : | காங்கேயம் |
| Taluk | : | காங்கேயம் |
| Age | : | 42 |

All accused are Present.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 16.02.2026

**முதல் விசாரணை**

1. நான் தற்போது காங்கேயம் அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 11.04.2024 ஆம் தேதி இரவு 8.35 மணிக்கு நான் மருத்துவமனையில் அலுவலில் இருந்தபோது 1. சதீஸ் (எ) வலுப்பூர்சாமி (35) த/பெ. குப்புச்சாமி, படியூர் என்பவரும், அன்றைய தினம் இரவு 9.55 மணியளவில் தங்கமணி(32), க/பெ.சுப்பிரமணி, இந்திரா நகர், படியூர் என்பவரும், அன்றைய தினம் இரவு 10.00 மணியளவில் 3. குப்புச்சாமி(60), த/பெ. அம்மாவாசை, இந்திரா நகர், படியூர் ஆகியோர்கள் தனித்தனியாக சிகிச்சைக்கு சேர்ந்தார்கள். 1. சதீஸ்(எ) வலுப்பூர்சாமி அடையாளம் தெரிந்த நபர்கள் அவரை தாக்கியதில் வலது நெற்றியில் சிராய்ப்புடன் சிறிய வீக்கம் இருந்தது தெரிந்தது. அவருக்கு முதலுதவி சிகிச்சை அளித்து மேல் சிகிக்சைக்காக திருப்பூர் மருத்துவ கல்லூரிக்கு பரிந்துரைத்தேன். அங்கு அவரை பரிசோதித்த மருத்தவர்கள் அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று சான்று வழங்கினார்கள். **அந்த விபத்து பதிவேடு / காயச்சான்று அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2. தங்கமணி(32), க/பெ.சுப்பிரமணி என்பவர் இடது பக்க கன்னத்தில் வலி உள்ளதாக தெரிவித்தார். அவருக்கு வெளிக்காயங்கள் எதுவும் இல்லை. அவருக்கு முதலுதவி சிகிச்சை அளித்து மேல் சிகிக்சைக்காக திருப்பூர் மருத்துவ கல்லூரிக்கு பரிந்துரைத்தேன். அங்கு அவரை பரிசோதித்த மருத்தவர்கள் அவருக்கு ஏற்பட்ட காயம்

சாதாரண காயம் என்று சான்று வழங்கினார்கள். **அந்த விபத்து பதிவேடு / காயச்சான்று அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

3. குப்புச்சாமி(60), த/பெ. அம்மாவாசை என்பவருக்கு இடது கை முட்டியிலும், இடது பக்க பின் மண்டையிலும் சிராய்ப்பு காயம் ஏற்பட்டிருந்தத. மேற்படி அவருக்கு முதலுதவி சிகிச்சை அளித்து மேல் சிகிக்சைக்காக திருப்பூர் மருத்துவ கல்லூரிக்கு பரிந்துரைத்தேன். அங்கு அவரை பரிசோதித்த மருத்தவர்கள் அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று சான்று வழங்கினார்கள். **அந்த விபத்து பதிவேடு / காயச்சான்று அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

சிகிச்சைக்கு வந்து சேர்ந்த மூவரும் வெவ்வேறு நேரங்களில் சிகிச்சைக்கு சேர்ந்துள்ளார்கள் என்றால் சரிதான். சதீஷ் (எ) வலுப்பூர்சாமி சிகிச்சைக்கு என்னிடம் வரும்போதே அவர் மது போதையில் இருந்தார் என்றால் சரிதான். ஒரு நபர் மதுபோதையில் தவறி கீழே விழுந்தால் கூட இதுபோல சிராய்ப்பு காயம் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றால் சரிதான். தங்கமணி என்பவருக்கு வெளிக்காயங்கள் எதுவும் இல்லாத நிலையில் கற்பனையாக கூட வலி இருப்பதாக சொல்லலாம் என்றால் சரிதான். தங்கமணி என்பவரி அரசு மருத்துவமனையில் பணியில் உள்ளாரா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. குப்புச்சாமி என்பவர் என்னிடம் இரவு 8.30 மணிக்கு இரண்டு நபர்கள் தாக்கியதாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். அந்த இரண்டு நபர்களின் பெயர் விபரங்களை சொல்லவில்லை என்றால் அடையாளம் தெரிந்த நபர் என்று சொன்னார். மூன்று நபர்களும் சிகிச்சைக்கு வந்த நேரம் முரண்பட்டுள்ளது என்றால் சரிதான். அதேபோல் சம்பவம் நடைபெற்ற நேரங்களும் முரண்பாடாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்